# 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 33/1995)

(2003 ஜுன் 30 அன்று இருந்தவாறு)

# THE TAMIL NADU COMPULSORY ELEMENTARY EDUCATION ACT, 1994

**(Tamil Nadu Act No.33 of 1995)**

(As on the 30th June, 2003)


தமிழாக்கம்:

சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை
தலைமைச் செயலகம்
சென்னை 600 009

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2003

# 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம்
# (தமிழ்நாடு சட்ட எண் 33/1995)

பிரிவுகளின் அமைப்பு


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள்வரையறைகள். | 1 |
| 3. | தொடக்கக்கல்வி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். | 2 |
| 4. | பள்ளிசெல்லும் வயதடைந்த குழந்தை ஒன்றின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒவ்வொருவருக்குமுள்ள கடமை. | 2 |
| 5. | விலக்களிப்புகள். | 2 |
| 6. | தகுதிவாய்ந்த அதிகாரி. | 3 |
| 7. | பணத்தண்டம். | 3 |
| 8. | குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல். | 3 |
| 9. | தகுதிவாய்ந்த அதிகாரி முதலானோர் பொது ஊழியர்களாக இருப்பர். | 3 |
| 10. | பணிப்புரை வழங்க அரசுக்குள்ள அதிகாரம். | 3 |
| 11. | நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பு. | 4 |
| 12. | விதிகளைச் செய்வதற்கான அதிகாரம். | 4 |
| 13. | இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம். | 4 |
| 16. | நீக்கறவும் காப்புரையும். | 4 |


------------

# 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 33/1995)

[குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவை, 1995ஆம் ஆண்டு நவம்பர், 21 அன்று பெற்று, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 1995ஆம் ஆண்டு டிசம்பர், 13 அன்று முதன்முதலாக வெளியிடப்பட்டது.]

தமிழ்நாடு மாநிலத்தில், தொடக்கக்கல்வியைக் கட்டாயமாக்குவது தொடர்பான சட்டத்தைத் திருத்தி ஒருங்கிணைப்பதற்காகவும் அதற்கெனச் சிறந்த வகைமுறைகளைச் செய்வதற்காகவுமான சட்டம்.

இந்திய அரசமைப்பின் 45ஆம் உறுப்பின்படி, அரசானது, அரசமைப்பின் தொடக்கத்திலிருந்து, பத்தாண்டுக் காலத்திற்குள்ளாக, அனைத்துக் குழந்தைகளுக்கும், அவர்கள் பதினான்கு வயதினை நிறைவெய்துகின்ற வரையில், இலவசமாக கட்டாயக் கல்வியினை வழங்குவதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதாலும்;

மற்றும், இந்த மாநிலத்தில் பள்ளி செல்லும் வயதினை எய்திய குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய தொடக்கக் கல்வியை வழங்குவதென கொள்கையளவிலான முடிவொன்று தமிழ்நாடு அரசினால் எடுக்கப்பட்டிருப்பதாலும்;

மற்றும் அந்தக் கொள்கையளவிலான முடிவிற்குச் செயல்வடிவங்கொடுப்பதற்கு, அத்தகைய அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வியை கட்டாயமாக்குவது தேவையாக இருப்பதாலும்;

மற்றும் குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒவ்வொருவரின் பேரிலும், தொடக்கப் பள்ளியொன்றில் குழந்தையைப் பயில்விக்கச் செய்வதையும் கட்டாயமான கடமைப் பொறுப்பாக்குவதும் கூட தேவையானதாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் நாற்பத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1.(1) இந்தச் சட்டம், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிக்கக்கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வேறுபட்ட வகைமுறைகளுக்கு வேறுபட்ட தேதிகள் குறிக்கப்படலாம்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,—

(1) "தொடக்கப்பள்ளியொன்றில் வருகைப்பதிவு" என்றால், வகுத்துரைக்கப் படக்கூடியவாறு அத்தகைய எண்ணிக்கையில் உள்ள நாள்கள் மற்றும் ஓராண்டில் அத்தகைய நாள்கள் மற்றும், ஒவ்வொரு நாளுக்குமான வகையில் அத்தகைய கால அளவில் அல்லது கால அளவுகளில் தொடக்கப் பள்ளியொன்றில், பயில்வதற்கு வருகை தருவது என்று பொருள்படும்;

(2) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்றால், அரசினால் 6ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி என்று பொருள்படும்;

(3) "தொடக்கக்கல்வி" என்றால், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பாடத் திட்டங்களிலும் அத்தகைய வகுப்பு வரையிலும் என்று பொருள்படும்;

(4) தொடக்கப் பள்ளி" என்றால், தகுதிவாய்ந்த, அதிகாரஅமைப்பினால், தொடக்கப் பள்ளியென ஏற்பளிக்கப்பட்ட பள்ளி என்று பொருள்படும், மற்றும் அது, தொடக்கக் கல்வி இயக்குநரால் அல்லது கல்வித்துறையின் அதிகாரி எவராலும் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்டு, இந்தச் சட்டமானது தொடங்கிய தேதியில் இருந்துவருகின்றவாறான பள்ளி எதனையும் உள்ளடக்கும்;

(5) "அரசு" என்றால், மாநில அரசு என்று பொருள்படும்;

(6) "பாதுகாவலர்" என்றால், சட்டப்படி அல்லது இயற்கையான உரிமைப்படி, அல்லது ஏற்கப்பட்ட வழக்காற்றின்படி, எந்த நபருக்கு குழந்தை எதனையும் கவனிப்பதோ, பேணிவளர்ப்பதோ அல்லது பாதுகாப்பதோ வந்தடைகின்றதோ, அந்த நபர் எவருமோ அல்லது குழந்தை எதனையும் கவனிப்பதையோ, பேணிவளர்ப்பதையோ, அல்லது பாதுகாப்பதையோ ஏற்றுக்கொண்டுள்ள அல்லது மேற்கொண்டுள்ள நபர் எவருமோ அல்லது சட்டப்படியான அதிகாரஅமைப்பு எதனாலும் குழந்தை எதனையும் கவனிப்பதோ, பேணிவளர்ப்பதையோ அல்லது பாதுகாப்பதையோ எவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த நபர் எவருமோ என்று பொருள்படும்;

(7) "பெற்றோர்" என்றால், குழந்தையொன்றின் தந்தை அல்லது தாய் என்று பொருள்படும்; மற்றும் அது மகவேற்பு செய்த தந்தையையோ அல்லது தாயையோ உள்ளடக்கும்;

(8) "பள்ளி செல்லும் வயது" என்றால் குழந்தையொன்றைப் பொறுத்தவரையில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வயது என்று பொருள்படும்;

(9). "ஆண்டு" என்றால், ஜுன் திங்கள் 1ஆம் நாளில் தொடங்குகின்ற கல்வியாண்டு என்று பொருள்படும்.

தொடக்கக் கல்வி கட்டாய மாக்கப் படுதல் வேண்டும்.

3.(1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, பள்ளிசெல்லும் வயதடைந்த குழந்தை ஒவ்வொன்றுக்கும் தொடக்கக் கல்வியானது கட்டாயமாக்கப்படுதல் வேண்டும்,

(2) (1)ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவங் கொடுப்பதற்காக, அரசானது, இம்மாநிலத்தில் தேவையானதெனக் கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையிலான தொடக்கப்பள்ளிகளுக்கு, பயிற்சிபெற்ற ஆசிரியர்களுடன் கூட, வகை செய்தல் வேண்டும்.

பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தை ஒன்றின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒவ்வொரு வருக்குமுள்ள கடமை.

4. தொடக்கப் பள்ளியொன்றில், குழந்தையொன்றைப் பயிலச் செய்வது, பள்ளிசெல்லும் வயதடைந்த அத்தகைய குழந்தையின் ஒவ்வொரு பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கடமையாகும்.

விலக்களிப்புகள்.

5. பள்ளி செல்லும் வயதடைந்த ஒரு குழந்தையின் வருகைப் பதிவானது—

(1) [1][xxx]

[1] 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்வி (திருத்தச்) சட்டத்தின் (49/1997) 2ஆம் பிரிவினால் விட்டுவிடப்பட்டது.

(2) நோய், பலவீனம் அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற காரணத்திற்காக, அத்தகைய குழந்தையானது தொடக்கப்பள்ளிக்கு வந்து பயில்வதற்குத் தடையாக, இருக்குமானால்;

(3) ஏற்பளிக்கப்படாத பள்ளி எதிலும் பயிற்றுவிக்கப்படும் கல்வியானது, உளநிறைவளிக்கிறவகையில் இருக்கிறதென தகுதிவாய்ந்த அதிகாரியால் விளம்பப்படுகிற நிலையில் அப்பள்ளி எதிலும் அத்தகைய குழந்தையானது வந்து பயில்கின்றதெனில்;

(4) உளநிறைவளிக்கின்ற வகையில் இருக்கின்றதென தகுதிவாய்ந்த அதிகாரியால் விளம்பப்படக்கூடிய அத்தகைய பிற முறை எதிலும் அத்தகைய குழந்தையானது பயிற்றுவிக்கப்படுமானால்;

(5) தொடக்க கல்விக்கென வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய வகுப்பு வரையில், தொடக்கப் பள்ளியொன்றிலோ அல்லது பிறவாறாகவோ அத்தகைய குழந்தையானது எற்கெனவே பயிற்றுவிக்கப் பட்டிருக்குமானால்; அல்லது

(6) வகுத்துரைக்கப்படக்கூடியவாறான பிற காரணம் எதனின் பேரிலும், அத்தகைய குழந்தையானது பள்ளிக்கு வந்து பயில்வதினின்று விலக்களிக்கப்படுமானால்

கட்டாயமாக்கப்படுதல் கூடாது.

6. (1) அரசு அறிவிக்கையின் வாயிலாக, மாவட்டக் கல்வி அலுவலரின் பதவிப்படி நிலைக்குக் கீழல்லாத கல்வித் துறையின் அலுவலர் எவரையும் தகுதிவாய்ந்த அதிகாரியாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளையும், அதன்படிச் செய்யப்பட்ட விதிகளையும் நிறைவேற்றிச் செயற்பாட்டிற்குக் கொண்டு வரும் நோக்கத்திற்காக, நியமிக்கலாம் மற்றும் வெவ்வேறு பகுதிகளுக்கு தனித்தனியாக தகுதி வாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்படலாம். தகுதிவாய்ந்த அதிகாரி.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய அலுவல் பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

7. 4ஆம் பிரிவின்படி, தம் கடமையை ஆற்றுவதற்குத் தவறுகிற, பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தையொன்றின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒவ்வொருவரும் நூறு ரூபாய்வரை நீடிக்கக்கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். பணத்தண்டம்.

8. நீதிமன்றம் எதுவும் இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதனையும், இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் எழுத்துருவில் செய்யப்பட்ட முறையீடொன்றின் பேரில் தவிர, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் கூடாது. குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

மையச் சட்டம் XLV/1860. 9. இந்திய தண்டனைச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் பொருளின்படி 6ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியும், 8ஆம் பிரிவின்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரும், பொது ஊழியர்களாக கொள்ளப்படுதல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரி முதலானோர் பொது ஊழியர்களாக இருப்பர்.

10. அரசானது, பொது நலனில் அக்கறை கொண்டு, ஆணையின் வாயிலாக, தகுதிவாய்ந்த அதிகாரியை ஆணையில் குறித்துரைக்கப்பட்ட எந்த நேர்விலும் விசாரணை செய்யுமாறோ, அல்லது இந்தச் சட்டத்தின்படி தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறோ பணிக்கலாம், மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியானவர், செய்யப்பட்ட பணிப்புரை வழங்க அரசுக்குள்ள அதிகாரம்.

அந்த விசாரணையின் அல்லது எடுக்கப்பட்ட அந்த நடவடிக்கைகளின் முடிவினை வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய காலஅளவிற்குள்ளாக அரசுக்கு அறிக்கையளித்தல் வேண்டும்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பு.

11. இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதற்கும் இணங்கிய வகையில், நல்லெண்ணத்துடன், செய்யப்பட்டுள்ள அல்லது செய்யக் கருதப்பட்டுள்ள செயல் எதற்காகவும், அரசுக்கு அல்லது அரசின் அலுவலர் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கோ, குற்றவழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவுமோ தொடுத்தல் கூடாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

12. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதையேனும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்டதற்குப் பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதனையடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்னர், அப்பேரவையானது, அத்தகைய விதி அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதையும் செய்யுமானால் அல்லது அவ்விதி அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலாகாதென அப்பேரவையானது முடிவு செய்யுமாயின், அவ்விதியோ அல்லது ஆணையோ அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்விளைவு பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப செயல்விளைவு பெறாதுபோதல் வேண்டும்: எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு, எதுவும், அந்த விதி அல்லது ஆணையின்படி இதற்கு முந்திய செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும், குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

13. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவங் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், அரசானது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணையொன்றின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டினை அகற்றும் பொருட்டு தறுவாய் கோருகிறவாறு, தேவையானவையென்றோ அல்லது உகந்தவையென்றோ, தமக்குத் தோன்றக் கூடிய, ஆனால் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரை: ஆனால், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவு ஒன்று முடிவுற்ற பின்பு ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.

நீக்கறவும் காப்புரையும்.

[1][16.(1) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு தொடக்கக் கல்விச் சட்டம் (இதனில் இதன்பின்பு இந்தப் பிரிவில் மேற்சொன்ன சட்டம் என்று குறிப்பிடப்படுவது) 32,33,34,35,36,37,38,39 மற்றும் 40ஆம் பிரிவுகளும் அதன்படி வகுக்கப்பட்ட விதிகளும் தவிர, ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) கல்விவரி விதித்தல், தீர்வை, கணிப்பு மற்றும் வசூலிப்பு மற்றும் நகராட்சிகள் தொடர்பான தொடக்கக்கல்வி நிதியத்திற்கு அரசுப் பங்களிப்பு, மேற்சொன்ன சட்டங்களின் 32,33,34,35,36,37,38,39 மற்றும் 40ஆம் பிரிவுகளின் வகைமுறைகளின்படி, மேற்சொன்ன பிரிவுகள் எப்போதும் இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தலை போன்று, தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.]

[1] 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக்கல்வி (திருத்தச்) சட்டத்தின் (49/1997) 3ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.